**திரு. கு.ப. அசோகன் அவர்களின் பணி நிறைவில் வாழ்த்துரை - 31.05.2020**

காலம்
தன் காலை வைத்து
முன்னே செல்லுதம்மா
காயம்பட்ட
நம்நெஞ்சம் யாவும்
பின்னே செல்லுதம்மா

சீரான ஊர்க்கரையின்
விழியோரக் குளிக்கரையில்
பூப்போல பிறந்தானிவன்
மாந்தளிர் போல மிளிர்ந்தானிவன்
புரண்டோடும் காவிரியின்
மண்ணோடு நடைபயின்று
பெயர் சொல்ல வந்தானிவன் - தாய்தந்தை
பெயர் சொல்லி வளர்ந்தானிவன்

எண்ணமும் ஏழெழுத்தும்
ஏட்டில் வரும் சீரெழுத்தும்
சிந்தனைகள் செய்தானிவன் - அதையும்
சிந்தித்தே அறிந்தானிவன்
பயின்ற இடம் நெல் களஞ்சியம்
வளர்ந்தது இந்த சொல் களஞ்சியம்
சஞ்சாரம் செய்தானிவன் - உள்ளத்தில்
அன்பாலே உயர்ந்தான் இவன்

நஞ்சை புஞ்சை நான்கு வகை
நதி ஓடும் பெரும் வுவகை
தஞ்சம் செய்ய வந்தானிவன்
சுங்கத்தில் சங்கம் செய்து
தந்தான் இவன்
எங்களை
சொந்தம் என்று
சொன்னானிவன்

சிங்காரச் சென்னையிலே
ரீங்காரப் பறவைகள்போல்
ஒன்றாக சேர்ந்தோம்நாமும் - நண்பனாய்
நாணலாய் வளைந்தோம்நாமும்
பல்லக்கில் பாச முல்லை
நேசத்தில் கொடி படர்ந்து
பாசமாய் படர்ந்தோம் நாமும் - நல்ல
நட்பிலே வளர்ந்தோம் நாமும்

காலங்கள் கரைபுரளும் ஞாலங்கள் படிஉயரும்
ஜாலங்கள் செய்தானிவன் - தர்மன் போல்
நியாயங்கள் செய்வானிவன் - நல்ல
நியாயத்தை சொல்வான் இவன்
வேடங்கள் விதிமாறும் விளைவுகள் அதைஏற்கும்
விளையாட்டாய் - வென்றானிவன் - அசோகன்
வீரனாய் நின்றானிவன் - விவேகத்தில்
விதுரன் என்றா னவன்

மங்கை என்ற தங்கை ஒன்று

கங்கை போல் வாசம் செய்ய
வர்ணமென வாழ்ந்தானிவன்
மனதில் முழுநிலவாய் நின்றானிவன்
பாலாஜி ராம்ஜி என்று சிங்கமாய் இருமணிகள்
கண்ணாகப் பெற்றானிவன் - தாலாட்டி
தன் - எண்ணம்போல் வளர்த்தானிவன்
தலை மன்னன் போல் காத்தான் இவன்

பணியிலும் பண்பு வைத்தான் - தாய்
மொழியிலும் அன்பை வைத்தான்
கவிபாடி வந்தானிவன் - பலரை
பன் பாட வைத்தானிவன்
சுங்கத்தை - பன் பாட வைத்தானிவன்
மலர் கொத்தாக முரசு ஒலி
சுங்க முரசாக பறக்கவிட்டு கெத்தாக நடந்தானிவன்
சுங்க இல்லம் - பேர் செதுக்கி வைத்தானிவன்

காலங்கள் உள்ளவரை மேகங்கள் சொல்லும்கதை
மேதினியில் நிற்பானிவன் - அசோகன்
நித்தம் விதை விதைப்பானிவன் - நின்று
னீல் கவிதை சொல்வானிவன்
கூவுகின்ற சேவல் போல
கூடி நிற்கும் கூட்டத்திற்கு
சேதி சொல்லும் சோதிடனிவன் - கொள்கையில்
னேர் கோல் போல உயர்ந்தான் இவன்

சுளைபழுக்கும் பழம்இனிக்கும் - இவன்
சொல்சுவைத்தால் பொருள்இனிக்கும்
கவியாள பிறந்தானிவன் - தன்
சொல்லாலே - கனிந்தானிவன்
நட்பு என்னும் ஓட்டுக்குள்ளே
கற்பு என்னும் கீற்றை வைத்து
உறவாடி நின்றான் இவன் - அதிலே
பற்று வைத்து காத்தான் இவன்

அறுபதிலும் ஆசை வரும்
பணிமுடிவு ஓய்வைத் தரும்
முடியாத ஆசையெல்லாம்
முன் சென்று நினைவில் வரும்
இளம் காலை இசைவு தந்து
இன்னிசையாய் திரையிசையில்
இன்கிதமாய் கவி யேற்க
வரும் காலம் துணைக்கிருக்க
மனதால் நான் வாழ்த்துகின்றேன்

வாழ்ந்திட்ட காலம் போல வரும் காலம் உனக்கமைய
சீரோடும் சிறப்போடும் குடும்பத்தின் அணைப்போடும்
குதூகலமாய் காலம் செல்ல யாழினி போல் பாடுகின்றேன்
வாழி சொல்லி வாழ்த்துகின்றேன்
நித்தம் பல கவி பாடி
குடும்பத்தின் சுகம் நாடி
கொத்தாக மனம் மகிழ
பொன் வாழ்த்து பாடுகின்றேன்

பக்தி யுண்டு பழகல் உண்டு பலர் சாய்ந்த கதைகள் உண்டு

வெற்றிடத்தில் மீன் பிடித்து விலைசொல்லி விற்பாருண்டு
ஆகாயத்தின் துருவத்திலே அறப்போர் செய்வேன்என்று
உலகின் ஊருக்குள்ளே அக்கப்போர் செய்வோர் உண்டு
பக்கத்தில் நீ இல்லா பருவத்தை செய்து கொண்டு
பெரு வாழ்வு - நீ வாழ
வெண்பாவில் வாழ்த்துகின்றேன் - நான்
பொங்கும் பொங்கல் போல் வாழ்த்துகின்றேன்

பணி ஓய்வு சிறப்பாக - பாங்காக கழிவதற்கு
மங்காத தமிழாக - உன் வாழ்க்கை சிறப்பதற்கு
மணிவிழா பாட்டாக மங்கலமாய் வாழ்த்துகின்றேன்
நட்பால் நாம் - நம் உயரம் - நலமாக உயர்வதற்கு
நல்லிசையாய் வாழ்த்துகின்றேன் - நண்பா - உனை
மெல்லிசையில் வாழ்த்துகின்றேன் - அருள் புரிய
வல்ல ஆண்டவனை அழைக்கின்றேன்

காலம்
தன் காலை வைத்து
முன்னே செல்லுதம்மா
காயம்பட்ட
நம்நெஞ்சம் யாவும்
பின்னே செல்லுதம்மா . . . . . . . .

.. .. .. .. **மு. ஜெயசங்கர்**
**31.05.2020**